1993 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252. டாக்டர் பெ. வீரபாண்டியன் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

252—

கூட்டுறவுக் கடைகள் மூலம் வழங்கப்படும் மண்ணெண்ணெய்

*15089 டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணெண்ணெய் வினியோகம் கூட்டுறவுக் கடைகளில் முறையாக வழங்கப்படுகிறதா ?

(ஆ) தவறு செய்யும் ஏஜெண்டுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலலவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) மண்ணெண்ணெய் வினியோகம் நியாய விலைக் கடைகளிலே முறையாக வழங்கப்பட்டு வருகிறது. அதிலே யாராவது தவறு செய்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு நடப்பு மாதத்தின் ஆரம்பத்திலிருந்தே மண்ணெண்ணெய் கிடைக்க ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறீர்களா ? அதுமட்டுமல்ல மண்ணெண்ணெய் ஏஜெண்டுகள் மண்ணெண்ணெய்யை ஆயில் கார்ப்பரேஷனிலிருந்து பெறுவதும் கடைகளுக்கு விநியோகம் செய்வதும் சீராக நடைபெறுகிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு வருகின்ற மண்ணெண்ணெய் 4 ஆயில் கம்பெனிகளாலே கொடுக்கப்படுகின்றது. அவர்கள் எந்தத் தேதியில் கொடுக்கிறார்கள் என்று முன்கூட்டியே அறிய முடியவில்லை. ஆகையினால் தான் மற்ற அத்தியாவசியப் பண்டங்களான அரிசியைப்

[1993 ஏப்ரல் 6

போல அவைகளைத் தேதி குறிப்பிட்டு நம்மால் கொடுக்க முடியவில்லை. அரிசியையெல்லாம் ஒன்றாம் தேதியிலிருந்தே கொடுக்கின்றோம். ஆனாலும் குறைந்த பட்சம் எந்தத் தேதியில் வரும் என்பதைக் கடைகளில் எழுதி வைக்கின்ற அளவுக்கு நடவடிக்கை எடுத்து இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் நகரங்கள் எவ்வாறு மேம்பாடு அடைகின்றதோ அதே போல கிராமங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறார்கள். கிராமங்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 3 லிட்டர் மண்ணெண்ணெய் தருகிறார்கள். இதைச் சற்று உயர்த்தி நகரங்களில் உள்ளதுபோல 5 லிட்டர் கொடுக்கப் படுமா ? அதுமட்டுமல்ல, மலைவாழ் மக்களுக்கு அரிசியின் விலையைக் குறைத்தும், அளவை உயர்த்தியும் தருகிறோம். ஆகவே, அவர்களுக்கும் அவ்வாறு மண்ணெண்ணெய் அளவை உயர்த்தி, விலையைச் சற்று குறைத்துத் தர முடியுமா ? குறிப்பாக, நாம் அரிசி விநியோகம் செய்யும்போது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் பெ. வீரபாண்டியன் இரண்டு கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். அடுத்ததைக் கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி விநியோகம் செய்யும்போது 3 ரகத்தில் நாம் கொடுக்கின்றோம். ரூ. 3.50 பைசாவில் இரண்டு ரகமும், (பச்சரிசி, புழுங்கல் அரிசி) ரூ. 2.50 பைசாவில் ஒரு ரகமும் கொடுக்கிறோம். எனவே, மூன்று பைகளை மக்கள் கடைக்கு எடுத்துக்கொண்டு வருவது சிரமம் என்று சொல்லுகிறார்கள். எனவே, ஆல்டர்னேட் (அடுத்தடுத்த) மாதத்தில் அரிசியை இரண்டு ரகத்தில் கொடுக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரிசி பற்றிய கேள்வியைத் தனிக் கேள்வியாகப் போடவும். மண்ணெண் ணெய்க்கு மட்டும் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தற்போது கிராமப்புறங்களில் 3 லிட்டர் மண்ணெண்ணெய் குடும்பக் கார்டுகளுக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல ஏற்கெனவே மலைப் பகுதிகளுக்கு அதிகமாக வழங்கிக் கொண்டு இருக்கிறோம். மாவட்ட தலைநகரங்களிலே 10

1993 ஏப்ரல் 6]

லிட்டர் என்று சொன்னால், நீலகிரி மாவட்டத்திலே 15 லிட்டராக வழங்கப்படுகிறது. பஞ்சாயத்துக்களுக்கு நாம் 5 லிட்டரும், 6 லிட்டரும் வழங்குகிறோம். அங்கே அது 10 லிட்டராக வழங்கப்படுகிறது. 3 லிட்டர், கிராமப்புறங்களிலே வழங்குவதை மலைப் பகுதிகளிலே 5 லிட்டராக வழங்கிக் கொண்டு இருக்கிறோம். ஏற்கனவே அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டு வருகிறது. என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கிராமங்களில் 3 லிட்டரை 1 லிட்டர் அதிகமாகக் கூட்டி 4 லிட்டராகக் கொடுக்கவேண்டுமென்று ஏற்கெனவே மத்திய அரசிடத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நானும் கேட்டு இருக்கிறேன். அப்படிக் கொடுப்பதாக இருந்தால் மாதம் 8 ஆயிரம் லிட்டர் அதிகமாகத் தேவைப்படும் தற்போது 70 ஆயிரம் கிலோ லிட்டர் மத்திய அரசு நமக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. அதைப் பரிசீலனை செய்வோம் என்று மத்திய அரசிலிருந்து தெரிவித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் வாங்குவதற்காக நியாய விலைக் கடைகளில் தாய்மார்களும் ஆடவர்களும் அங்கே கடுமையான வெயிலிலே நின்று கொண்டு இருக்கிறார்கள். எனவே, அந்த நியாய விலைக் கடைகள் முன்பாக, வெயில் நேரங்களில் அவர்களை வெயில் பாதிக்காத வண்ணம் தென்னங் கீற்றுகளாலான சாதாரண கொட்டகைகளையாவது போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இது குறித்து பல முறை அந்த அதிகாரிகளிடத்தில் சொல்லியும்கூட அவர்கள் போடாமல் இருக்கின்ற காரணத்தினாலே இதனை ஒரு உத்தரவாகப் போட்டு, தமிழ்நாடு முழுக்க அதனைப் போடுவதவற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே நாம் நடத்துகின்ற 22,000 நியாய விலைக் கடைகளில் 15,000 கடைகளுக்கு மேலே நஷ்டத்திலே நடந்து வருகின்றன. பகலிலே வெயில் நேரத்தில் நிற்பது கடினமான காரியந்தான். தாய்மார்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரியும். ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே கொஞ்சம் ஒத்துழைத்தால் அந்தந்த இடங்களில் கொஞ்சம் கீற்றுக்கொட்டகைகளைப் போடுவதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.